**மிஹின் லங்கா (பிறைவேட்) லிமிட்டட்– 2016/2017**

---

மிஹின் லங்கா (பிறைவேட்) லிமிட்டட் கம்பனியின் (''கம்பனி'') 2017 மார்ச் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்றுக்கள் மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான இலாப அல்லது நட்ட மற்றும் விரிவான வருமானக் கூற்றுக்கள், உரிமை மூலதனத்தில் மாற்றங்கள் கூற்று, முடிவடைந்த ஆண்டிற்கான காசுப்பாய்ச்சல் கூற்றுக்கள் மற்றும் முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகளினதும் ஏனைய விளக்கத் தகவல்களினதும் பொழிப்புக்களை உள்ளடக்கிய 2017 மார்ச் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(6) ஆம் உறுப்புரையின் பிரகாரம் இந்த அறிக்கை வழங்கப்படுகின்றது.

## 1.2 நிதிக்கூற்றுக்களுக்கான சபையின் பொறுப்பு

---

இந்நிதிக்கூற்றுக்களை இலங்கை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க தயாரித்து நியாயமாகச் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென சபை நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு பணிப்பாளர் சபை (''சபை'') பொறுப்பாக உள்ளது.

## 1.3 கணக்காய்வாளரின் பொறுப்பு

---

எனது கணக்காய்வின் அடிப்படையில் இந்நிதிக்கூற்றுக்களின் மீது அபிப்பிராயம் தெரிவிப்பது எனது பொறுப்பாகும். இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். ஒழுக்கநெறி வேண்டுதல்களுடன் நான் இணங்கி நடப்பதனையும் நிதிக்கூற்றுக்கள் பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் அற்றவையா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதற்கு கணக்காய்வு திட்டமிட்டு மேற்கொள்ளப்படுவதனையும் இந்நியமங்கள் வேண்டுகின்றன.

நிதிக்கூற்றுக்களிலுள்ள தொகைகளினையும் வெளிப்படுத்தல்களையும் பற்றிய கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்வதற்கான செயற்பாட்டு நடைமுறைகளில் கணக்காய்வு ஈடுபடுகின்றது. மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தின் மதிப்பீட்டினை உள்ளடக்கும் கணக்காய்வாளரின் தீர்மானம் மீது தெரிவு செய்யப்பட்ட நடைமுறைகள் தங்கியுள்ளது. அந்த ஆபத்தினை மதிப்பீடு செய்கையில் சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைக்கும் வகையில் கம்பனியின் நிதிக்கூற்றுக்களைத் தயாரித்தல் மற்றும் நியாயமாகச் சமர்ப்பித்தலுக்குரிய உள்ளகக் கட்டுப்பாடுகளை கணக்காய்வாளர் கருத்தில் கொள்கின்றாரேயன்றி கம்பனியின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் வினைத்திறனின் மீது அபிப்பிராயம் தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல. சபையினால் பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தமான தன்மையினையும் சபையினால் மேற்கொண்ட கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மதிப்பாய்வு செய்தல் அத்துடன் நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தலினை மதிப்பாய்வு செய்தல் என்பவற்றினையும் கணக்காய்வு உள்ளடக்கியுள்ளது.

எனது கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படையினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

## 2. நிதிக்கூற்றுக்கள்

------------------------------

### 2.1 அபிப்பிராயம்

-----------------------

கம்பனியின் 2017 மார்ச் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் இலங்கை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 2.1.1 விடயத்தின் மீதான அழுத்தம்

------------------------------------------------------
-

இலங்கை அரசாங்கம் 2015 ஒக்தோபர் 30 இலிருந்து அமுலுக்குவரும் வகையில் கம்பனியின் தொழிற்பாடுகளினை நிறுத்துவதற்கு எடுக்கப்பட்ட தீர்மானமொன்றினை விபரிக்கின்ற நிதிக்கூற்றுக்களுக்கான 03 ஆம் குறிப்பிற்கு எனது கவனத்தைச் செலுத்துகின்றேன். மேலும், கம்பனி 2017 நவம்பர் 8 ஆந் திகதிய அமைச்சரவையின் தீர்மானத்தின் பிரகாரம், 2018 சனவரி 15 இல் வர்த்தக உயர் நீதிமன்றத்தில் கலைப்பதற்கான மனுவொன்றையும் தற்காலிக கலைப்பாளன் ஒருவரையும் நியமிப்பதற்கான மனுவொன்றையும் தாக்கல்செய்திருந்தது. ஆகையினால், இந்நிதிக்கூற்றுக்கள் முறிந்துசெல்லும் (break-up basis) அடிப்படையொன்றில் தயாரிக்கப்பட்டிருந்தது. இந்த விடயம் தொடர்பில் எனது அபிப்பிராயம் முனைப்பழியாக்கப்படவில்லை.

### 2.1.2 ஏனைய சட்டரீதியான மற்றும் பிரமாணரீதியான தேவைப்பாடுகள் மீதான அறிக்கை

------------------------------------------------------------------------------------------------------------------------------------------------------

2007 இன் 07 ஆம் இலக்க கம்பனிகள் அதிகாரச்சட்டத்தின் 163(2) ஆம் பிரிவின் மூலம் வேண்டப்பட்டவாறு, நான் பின்வருமாறு குறிப்பிடுகின்றேன்.

(அ) அபிப்பிராயத்திற்கான அடிப்படையும் கணக்காய்வின் நோக்கெல்லையும் வரையறைகளும் மேற்குறிப்பிடப்பட்டவாறு உள்ளன.

(ஆ) நான் அபிப்பிராயப்படுவதாவது,

- கணக்காய்விற்கு அவசியமான சகல தகவல்களையும் விளக்கங்களையும் நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என்பதுடன் இதுவரையான எனது பரீட்சிப்பின் மூலம் தென்படுகின்றவாறு முறையான கணக்கீட்டுப் பதிவேடுகள் கம்பனியால் வைத்திருக்கப்படுகின்றன என்பதும்,

- 2007 இன் 07 ஆம் இலக்க கம்பனிகள் அதிகாரச்சட்டத்தின் 151 பிரிவின் தேவைப்பாடுகளுடன் கம்பனி நிதிக்கூற்றுக்கள் இணங்குகின்றன என்பதும் ஆகும்.

### 2.2 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

---------------------------------------------------------------------------

### 2.2.1 கம்பனியின் தொடர்ந்துசெல்லும் தன்மை

---------------------------------------------------------------------------

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) மீளாய்வாண்டின்போது கம்பனி ரூபா 2,470 மில்லியன் நட்டமொன்றை பதிவுசெய்திருந்ததுடன் மீளாய்வாண்டின் இறுதியில் உள்ளபடியான திரண்ட நட்டம் ரூபா 19,743 மில்லியனொன்றாகக் காணப்பட்டது. இருப்பினும், கம்பனியின்

நடைமுறைப் பொறுப்புக்கள் அதன் நடைமுறைச் சொத்துக்களினை விட ரூபா 5,267 மில்லியனால் மிகைத்திருந்ததுடன் அறிக்கைத் திகதியில் உள்ளபடியான கம்பனியின் மொத்த உரிமை, கம்பனியின் பிரதிகூலமான நிதிநிலைமையினைக் காட்டுகின்ற ரூபா 5,267 மில்லியன் எதிர்மறையொன்றிற்கு குறைவடைந்திருந்தது.

(ஆ) கம்பனியின் நிதிநிலைமையின் பற்றாக்குறை மற்றும் மேலதிக செயற்பாட்டு நட்டங்களினை தடுக்கும்பொருட்டு, இலங்கை அரசாங்கம் 2016 ஒக்தோபர் 30 இல் இருந்து அமுலுக்கு வரும் வகையில் கம்பனியின் தொழிற்பாடுகளினை நிறுத்துவதற்கு மற்றும் கம்பனியினால் தற்போது செயற்படுத்தப்பட்ட பாதை வலையமைப்பினை அகத்துறுஞ்சுவதற்கும் ஸ்ரீலங்கன் எயார்லைன்ஸ் இனை வழிகாட்டுவதற்கும் தீர்மானமொன்று எடுக்கப்பட்டது. ஆகையினால், கம்பனியின் நிதிக்கூற்றுக்கள் முறிந்துசெல்லும் (a break-up basis) அடிப்படையொன்றில் தயாரிக்கப்பட்டிருந்தது.

### 2.2.2 இலங்கை கணக்கீட்டு நியமங்கள் (எல்கேஏஎஸ் / எஸ்எல்எவ்ஆர்எஸ்)

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) நிதிசார் கருவிகள் (Financial Instruments) மீதான இலங்கை நிதிசார் அறிக்கையிடல் நியமத்தின் (எஸ்எல்எவ்ஆர்எஸ் - 7) 08 ஆம் பந்தியின் பிரகாரம், நிதிசார் சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்களின் ஒவ்வொரு வகையினதும் கீழ்க்கொண்டு செல்லும் தொகை நிதிநிலைமைக்கூற்றில் அல்லது குறிப்புக்களில் வெளிப்படுத்தப்படல்வேண்டும். எவ்வாறாயினும், குறுங்கால முதலீடுகள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பில் எவ்விதமான வெளிப்படுத்தல்களும் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

(ஆ) காசுப்பாய்ச்சல் கூற்று மீதான இலங்கை கணக்கீட்டு நியமத்தின் 20(ஆ) பந்தியின் (எல்கேஏஎஸ்-07) பிரகாரம், மறைமுக முறையின் கீழ் செயற்பாட்டு காசுப்பாய்ச்சலினை வருவிக்கையில் பணமீட்டாத செலவினங்களாக (non-cash expenses) காசுப்பாய்ச்சல் கூற்றில் கட்புலனாகாத சொத்துக்கள், நட்டக்கழிவு செலவு என்பன சரிப்படுத்தப்பட்டிருக்கவில்லை.

### 2.2.3 பெறவேண்டிய மற்றும் செலுத்தவேண்டிய கணக்குகள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) 2017 மார்ச் 31 இல் உள்ளபடியான மொத்த பெறவேண்டிய மீதி ரூபா 196,273,498 ஆகக் காணப்பட்டதுடன் அதில் ரூபா 27,356,619 ஒன்று தொடக்கம் ஆறு வருடங்களுக்கும் அதிகமாக அறவிடப்பட்டிராது தொடர்ந்தும் காணப்பட்டது. விபரங்கள் கீழே தரப்பட்டுள்ளன.

| **வாடிக்கையாளர்** | **தொகை** | **கடன் திகதி** |
|---|---|---|
| | **ரூபா.** | |
| எச்ஓ விற்பனைகள் | 313,610 | 2015 திசெம்பர் |
| சாட்டார் வருமானம் | 363,000 | 2011 ஒக்தோபர் |
| மிஹின் லங்கா டிக்கட் | 13,718,866 | 2012 ஏப்ரல் |
| டனாட் ஏ துபாய் | 1,985,875 | 2012 பெப்பரவரி / மார்ச் |
| படுர் ஏவியசன் | 8,717,279 | 2014 ஆகஸ்ட் / செப்தெம்பர் |
| வேல்ட் எயா (பிறைவேட்) லிமிட்டட் | 2,257,989 | 2011 மார்ச் |

(ஆ) மேலும், மொத்தக் கடன்பட்டோரில் 59 சதவீதத்திற்குச் சமமான ரூபா 115 மில்லியன் கூட்டுத்தொகையான மீதிகள் 90 நாட்களுக்கும் அதிகமாக அறவிடப்பட்டிராது தொடர்ந்தும் காணப்படுகின்றது.

## 2.3 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவ தீர்மானங்களுடன் இணங்காமை

பின்வரும் சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவ தீர்மானங்களுடனான இணங்காமைச் சந்தர்ப்பங்கள் கணக்காய்வில் அவதானிக்கப்பட்டன.

| சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவ தீர்மானங்களுடனான தொடர்பு | இணங்காமை |
|---|---|
| (அ) நல்லாளுகைக்கான பொது முயற்சி வழிகாட்டல்கள் மீதான 2003 யூன் 02 ஆந் திகதிய பிஈடீ/12 ஆம் இலக்க பொது முயற்சிகள் சுற்றறிக்கை | |
| (i) 4.2.6 ஆம் பிரிவு | சுற்றறிக்கையின் பிற்சேர்க்கை 1 இல் வழங்கப்பட்ட வடிவமைப்பின் பிரகாரம் காலாண்டின் இறுதியின் பின்னர் 30 நாட்கள் அல்லது அதற்கு முன்னர் வரிசை அமைச்சு மற்றும் பொதுத் திறைசேரியிலுள்ள பொது முயற்சிகள் திணைக்களத்திற்கு காலாண்டு செயலாற்றல் அறிக்கைகள் அனுப்பப்படல் வேண்டும். எவ்வாறாயினும், கம்பனியின் தொழிற்பாடுகள் நிறுத்தப்படும் வரை அவ்வாறான எவ்வித அறிக்கைகளினையும் கம்பனி தயாரித்து சமர்ப்பித்திருக்கவில்லை. |
| (ii) 7.3 ஆம் பிரிவு | கேள்வி நடைமுறை மீதான வழிகாட்டல்கள் அனைத்து பொது முயற்சிகளுக்கும் கட்டியமாகக் காணப்படுகின்றன. எவ்வாறாயினும், கம்பனியின் பெறுகைக் கையேடு வரிசை அமைச்சினால் அங்கீகரிக்கப்பட்டிருக்காததுடன் பொதுத் திறைசேரியிலுள்ள பொது முயற்சிகள் திணைக்களத்தின் இணக்கப்பாடு பெறப்பட்டிருக்கவில்லை. |
| (iii) 7.4.5 ஆம் பிரிவு | கம்பனியின் சொத்துக்களின் மெய்மையாய்விற்கான வருடாந்த அளவைச் சபை மீளாய்வாண்டிற்கு மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. |
| (iv) 9.2(ஈ) பிரிவு | அமைப்பு வரைபடம் மற்றும் கம்பனியின் அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினர் பொதுத் திறைசேரியிலுள்ள பொது முயற்சிகள் திணைக்களத்துடன் பதிவுசெய்யப்பட்டிருக்கவில்லை. |
| (v) 9.3.1(i) ஆம் பிரிவு | கம்பனியின் ஆட்சேர்ப்புக்கள் மற்றும் பதவியுயர்வுகள் திட்டம் (எஸ்ஓஆர்) பொதுத்திறைசேரியின் இணக்கப்பாட்டுடன் சபை மற்றும் வரிசை அமைச்சினால் அங்கீகரிக்கப்படவில்லை. |

| | |
|---|---|
| (ஆ) 2016 ஒக்தோபர் 27 ஆந் திகதிய பிஈடி 1/2015(i) ஆம் இலக்க பொது முயற்சிகள் சுற்றறிக்கை | அலுவலக வாகனமொன்றிற்கு உரித்துடைய உத்தியோகத்தரொருவர் அலுவலக வாகனத்தை பயன்படுத்தவே அல்லது ரூபா 50,000 மாதாந்த போக்குவரத்து படியொன்றை பெற்றுக்கொள்ளவோ முடியும். எவ்வாறாயினும், 2016/17 ஆம் ஆண்டின்போது சுற்றறிக்கைக்கு முரணாக ஏழு உத்தியோகத்தர்களுக்கு மாதாந்த போக்குவரத்துப் படியாக ரூபா 60,000 தொகையொன்றை கம்பனி செலுத்தியிருந்தது. இது தொடர்பில் செலுத்தப்பட்ட மொத்த மிகை செலுத்துகை ரூபா 840,000 ஆகக் காணப்பட்டது. மேலும், சுற்றறிக்கைக்கு முரணாக அவ்வாறான உத்தியோகத்தர்களுக்கு சாரதிப் படிகளாக ரூபா 1,680,000 தொகையொன்றை கம்பனி செலுத்தியிருந்தது. |
| (இ) 2006 ஆம் ஆண்டின் 10 ஆம் இலக்க வருமான வரி அதிகாரச்சட்டத்தின் 7(ஒ) பிரிவு | பீஓஐ (BOI) உடன்படிக்கையின் மூலம் வழங்கப்பட்ட வரி விலக்களிப்பினை கம்பனி அனுபவிப்பதனால், 2016/2017 மதிப்பாண்டிற்காக (''வை/ஏ'') வருமான வரி கணிப்பீட்டினை கம்பனி தயாரித்திருக்கவில்லை. எவ்வாறாயினும், வை/ஏ 2015/2016 இன் வருமான வரி கணிப்பீட்டிற்கான 6 ஆம் குறிப்பு, 2006 ஆம் ஆண்டின் 10 ஆம் இலக்க வருமான வரி அதிகாரச்சட்டத்தின் 7(ஒ) பிரிவின் பிரகாரம் கம்பனி வரி விலக்களிப்புக்களினை பெற்றிருந்தது. எவ்வாறாயினும், அவ்வாறான வரி விலக்களிப்பு உள்நாட்டு இறைவரித் திணைக்களத்திடமிருந்து பெறப்பட்டிருக்கவில்லை. |

## 3. நிதிசார் மீளாய்வு

### 3.1 நிதிசார் விளைவு

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) தொடர்புடைய முன்னைய ஆண்டின் ரூபா 1,252 மில்லியன் நட்டத்துடன் ஒப்பிடுகையில் ரூபா 2,470 மில்லியன் தேறிய நட்டமொன்றை கம்பனி விளைவித்திருந்தது. ஆகையினால் மீளாய்வாண்டின் நிதிசார் விளைவுகளில் ரூபா 1,218 மில்லியன் பற்றாக்குறையொன்றைச் சுட்டிக்காட்டுகின்றது. ரூபா 567 மில்லியன் தொகையான நிதிக் கிரயம் 185.51 சதவீதத்தினால் அதிகரித்தமை இந்தப் பற்றாக்குறைக்கு பிரதான காரணமாகக் காணப்படுகின்றது. தொழிற்பாடுகள் நிறுத்தப்பட்டமை காரணமாக மீளாய்வாண்டின்போது ஏழு மாதங்களுக்கு மாத்திரம் கம்பனி செயற்பட்டதிலிருந்து மொத்த வருமானம் 31.3 சதவீதத்தினால் குறைவடைந்திருந்தது.

(ஆ) கம்பனியின் எதிர்மறை பெறுமதி கோரிக்கை 2012/13 தொடக்கம் 2016/17 ஆம் ஆண்டு வரை ரூபா 12,571 மில்லியனிலிருந்து ரூபா 1,758 மில்லியன் வரை வேறுபட்டிருந்தது. விபரங்கள் கீழே தரப்பட்டுள்ளன.

| விபரம் | 2016/17 | 2015/16 | 2014/15 | 2013/14 | 2012/13 |
|---|---|---|---|---|---|
| ---------- | ---------- | ---------- | ---------- | ---------- | ---------- |
| | ரூபா.000' | ரூபா.000' | ரூபா.000' | ரூபா.000' | ரூபா.000' |
| வரிக்குப் பின்னரான இலாபம் / (நட்டம்) (பங்கிலாபங்களின் செலுத்துகைக்கு முன்னர்) | (2,469,730) | (1,251,947) | (1,406,483) | (2,591,539) | (3,293,475) |
| **சேர்:-** | | | | | |
| ------- | | | | | |
| ஊழியர் ஊதியம் | 631,782 | 888,217 | 690,450 | 726,194 | 519,297 |
| பெறுமானத்தேய்வு | 67,897 | 13,278 | 5,869 | 4,683 | 6,891 |
| காலக்கழிவு | 11,657 | 42,414 | 44,690 | 34,779 | 15,590 |
| **மொத்தம்** | **(1,758,394)** | **(308,038)** | **(665,474)** | **(1,825,883)** | **(2,751,697)** |
| | ======= | ======= | ======= | ======= | ======= |

பிரதானமாக, வரிக்குப் பின்னரான நட்டம் அதிகரித்தமை மற்றும் பெறுமானத்தேய்வு மற்றும் காலக்கழிவு அதிகரித்தமை காரணமாக மீளாய்வாண்டில் கம்பனியின் எதிர்மறை பெறுமதி சேர்க்கை ரூபா 1,450 மில்லியனால் அதிகரித்திருந்தது. ரூபா 368 மில்லியன் தொகையாக நிதிக் கிரயம் அதிகரித்திருந்ததன் விளைவொன்றாக, மீளாய்வாண்டின்போது வரிக்குப் பின்னரான நட்டம் ரூபா 1,218 மில்லியனால் அதிகரித்திருந்தது.

**3.2 பகுப்பாய்வு நிதிசார் மீளாய்வு**

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) கம்பனி 23.91 சதவீத செயற்பாட்டு நட்ட எல்லை, 30.70 சதவீத தேறிய நட்ட எல்லை மற்றும் 30.70 சதவீத மொத்த விரிவான நட்ட எல்லையொன்றின் அனுபவத்தினைக் கொண்டுள்ளது. வருமானம் குறைவடைந்தமை மற்றும் தேறிய நிதிக் கிரயம் அதிகரித்தமை மீளாய்வாண்டின்போது நட்டத்திற்கு பிரதானமாக பங்களித்திருந்தது.

(ஆ) கம்பனியின் எதிர்மறை தேறிய மதிப்பின் காரணமாக, மீளாய்வாண்டின்போது கடன் உரிமை விகிதம் எதிர்மறை 152 சதவீதமாகக் காணப்பட்டது. வியாபாரத்தின் சாதாரண நிலைமையில் கடன்களினை கொடுத்துத்தீர்க்க முடியாத சந்தர்ப்பத்தில் கடன்கொடுத்தோர் பாதுகாக்கப்படவில்லை என்பதை இது சுட்டிக் காட்டுகின்றது.

(இ) நடைமுறை விகிதம் 0.34:1 ஆகக் காணப்பட்டதுடன் அது கம்பனியின் எதிர்மறையான திரவத்தன்மை நிலையினை சுட்டிக்காட்டுகின்றது.

**4. செயற்பாட்டு மீளாய்வு**

**4.1 செயலாற்றல்**

அமைப்பு அகவிதியின் பிரகாரம், உள்ளூர் மற்றும் சர்வதேச விமானப் போக்குவரத்து அல்லது விமான போக்குவரத்தை பொறுப்பேற்று வியாபாரமொன்றை நடாத்திச்செல்லுதல் மற்றும் பயணிகள் மற்றும் சரக்குகளுக்கான விமான போக்குவரத்து சேவைகளினை செயற்படுத்துதல் கம்பனியின் ஆரம்ப நோக்கமாகக் காணப்பட்டது. கம்பனியின் முக்கிய செயலாற்றல் குறிகாட்டிகள் (கேபிஐ'எஸ்) கடந்த 04 ஆண்டுகளின் போது பின்வருமாறு வேறுபட்டுக் காணப்பட்டது.

| கேபிஜ | 2015/16 | 2014/15 | 2013/14 | 2012/13 |
|---|---|---|---|---|
| பயணிகள் கொள்ளளவு (ஏஎஸ்கே மில்லியன்) | 1,822 | 1,675 | 1,850 | 1,395 |
| எடுத்துச்செல்லப்பட்ட பயணிகள் (ஆர்பிகே மில்லியன்) | 1,363 | 1,216 | 1,404 | 1,050 |
| ஒட்டுமொத்த இயலளவு (ஏரீகே மில்லியன்) | 208 | பொருந்தாது | | |
| எடுத்துச்செல்லப்பட்ட ஒட்டுமொத்த சுமை (ஆர்ரீகே மில்லியன்) | 148 | | | |
| பயணிகள் சுமை காரணி (%) | 75 | 73 | 76 | 75 |
| எடுத்துச்செல்லப்பட்ட பயணிகள் (எண்/கை. ஆயிரத்தில்) | 595 | 463 | 511 | 401 |
| எடுத்துச்செல்லப்பட்ட சரக்குகள் (டொன்கள்) | 4,764 | 3,435 | 3,134 | 2,504 |

மேலுள்ளவாறு, முதல் இரண்டு வருடங்களில் பயணிகள் கொள்ளளவு, எடுத்துச் செல்லப்பட்ட பயணிகள் மற்றும் பயணிகள் சுமை காரணி அதிகரித்துக் காணப்பட்டதுடன் அவை 2014/2015 இல் குறைவடைந்திருந்ததுடன் மீண்டும் முன்னைய ஆண்டில் அதிகரித்திருந்தது. எவ்வாறாயினும், 2016/2017 ஆம் ஆண்டிற்கான 07 மாதங்கள் காலப்பகுதிக்கான பயணிகள் கொள்ளளவு, எடுத்துச்செல்லப்பட்ட பயணிகள், பயணிகள் சுமை காரணி மற்றும் ஏற்பட்ட சரக்குகள் என்பவற்றை ஆவணங்களின் பற்றாக்குறை காரணமாக மதிப்பிடுவதற்கு முடியாது காணப்பட்டன. மேலும், கம்பனியால் எடுக்கப்பட்ட தீர்மானத்தின் பிரகாரம் 2016 ஒக்தோபர் 30 இலிருந்து கம்பனியின் தொழிற்பாடுகள் நிறுத்தப்பட்டிருந்தது.

## 4.2 பாதீட்டுக் கட்டுப்பாடு

பாதிடப்பட்ட மற்றும் உள்ளபடியானவற்றுக்கிடையே குறிப்பிடத்தக்களவு குறைபாடுகள் அவதானிக்கப்பட்டன. ஆகையினால், பாதீடானது முகாமைத்துவ கருவியொன்றாக பயன்படுத்தப்பட்டிருக்கவில்லை.

## 4.3 மனிதவள முகாமைத்துவம்

2016 ஒக்தோபர் 01 இல் உள்ளவாறான கம்பனியின் ஊழியர்களின் மொத்த எண்ணிக்கை 302 ஆகக் காணப்பட்டது. கம்பனியின் தொழிற்பாடுகளினை நிறுத்துவதற்கு இலங்கை அரசினால் தீர்மானம் எடுக்கப்பட்ட பின்னர், ஸ்ரீலங்கன் எயார்லைன்ஸ் லிமிட்டட் கம்பனியின் 125 ஊழியர்களினை ஆட்சேர்ப்புச்செய்திருந்ததுடன் கம்பனியின் 168 ஊழியர்கள் ரூபா 165.22 மில்லியன் இழப்பீட்டினைச் செலுத்துவதன் மூலம் தானாக முன்வந்து ஓய்வு பெற்றிருந்தனர். மேலும், 02 ஊழியர்கள் 2017 மார்ச் 31 வரையிலும் கம்பனியில் தொடர்ந்தும் காணப்பட்டனர்.

## 5. முறைமைகளும் கட்டுப்பாடுகளும்

கணக்காய்வின்போது அவதானிக்கப்பட்ட குறைபாடுகள் கம்பனி தலைவரின் கவனத்திற்குக் கொண்டுவரப்பட்டன. பின்வரும் கட்டுப்பாட்டு பரப்புக்கள் தொடர்பில் விசேட கவனம் தேவைப்படுகின்றது.

| கட்டுப்பாட்டு பரப்பு | | பலவீனங்கள் |
|---|---|---|
| (அ) மனிதவள முகாமைத்துவம் | | பதவியணியினர் மற்றும் ஆட்சேர்ப்புத் திட்டம் (எஸ்ஓஆர்) என்பன பொதுத்திறைசேரியின் இணக்கப்பாட்டுடன் வரிசை அமைச்சினல் அங்கீகரிக்கப்பட்டிருக்கவில்லை. |
| (ஆ) கணக்கீடு | (i) | நாளேட்டுப் பதிவுகள் மீதான கட்டுப்பாடுகளின் பற்றாக்குறை |
| | (ii) | இணக்கஞ்செய்யப்படாத கணக்குகள் மீதான கட்டுப்பாடுகளின் பற்றாக்குறை |
| | (iii) | இலங்கை கணக்கீட்டு நியமங்களுடன் இணங்காமை |
| (இ) பெறவேண்டிய மற்றும் செலுத்தவேண்டிய கணக்குகள் | (i) | பிரயாண முகவர்களிடமிருந்தான வங்கி உத்தரவாதங்களின் பற்றாக்குறை |
| | (ii) | அறவிடப்பட்டு மற்றும் தீர்ப்பனவு செய்யப்பட்டிராத நீண்ட நிலுவையாகவுள்ள பெறவேண்டியவைகள் மற்றும் செலுத்த வேண்டியவைகள் |